


**05. 05. 2026**

தலைப்புச் செய்திகள்

1. தமிழகத்தில் புதிய அரசு அமைப்பதற்கான நடவடிக்கைகள் தொடங்கி உள்ளன.

த.வெ.க. தலைவர் திரு. ஜோசப் விஜய், அக்கட்சியின் சட்டமன்ற குழு தலைவராக ஒருமனதாக தேர்ந்தெடுக்கப் பட்டார்.

2. தி.மு.க. தலைவர் திரு. மு.க. ஸ்டாலின் தமது முதலமைச்சர் பதவியை இன்று ராஜினாமா செய்துள்ளார்.

3. கேரளத்தில் ஆட்சியை கைப்பற்றி உள்ள காங்கிரஸ் தலைமையிலான ஐக்கிய ஜனநாயக முன்னணி அரசு அமைப்பதற்கான பேச்சுவார்த்தைகளை தொடங்கி உள்ளது.

4. தேனி, திண்டுக்கல், கரூர், திருச்சி, நாமக்கல், ஈரோடு, நீலகிரி மாவட்டங்களின் ஓரிரு இடங்களில், இன்று கனமழை பெய்யக்கூடும் என்று சென்னை வானிலை ஆய்வுமையம் தொ◌ிவித்துள்ளது.

5. ஐ.பி.எல். 20-20 கிரிக்கெட் போட்டியில் புதுதில்லியில் இன்றிரவு ஏழரை மணிக்கு சென்னை சூப்பர் கிங்ஸ் – டெல்லி கேப்பிட்டல்ஸை எதிர்கொள்கிறது.

இனி வி◌ா◌ிவான செய்திகள்

❖❖❖❖❖❖❖❖

தமிழக தேர்தல்

தமிழகத்தில் சட்டப் பேரவை தேர்தல் முடிவுகளை தொடர்ந்து அரசு அமைக்கும் அரசியல் நடவடிக்கைகள் களைக்கட்டியுள்ளன.

தமிழகத்தில் தனிப்பெரும் கட்சியாக உருவெடுத்துள்ள த.வெ.க.வின் சட்டப்பேரவை குழு தலைவராக அக்கட்சியின்

தலைவர் திரு. ஜோசப் விஜய் இன்று ஒருமனதாக தேர்ந்தெடுக்கப்பட்டார்.

முன்னதாக சென்னையை அடுத்த பனையூரில் த.வெ.க. தலைமை அலுவலகத்தில், அக்கட்சியின் புதிய சட்டப் பேரவை உறுப்பினர்கள் கூடி ஒருமனதாக திரு. விஜய்யை அக்கட்சியின் சட்டப்பேரவை குழு தலைவராக தேர்ந்தெடுத்தனர்.

தமிழகத்தில் புதிய அரசு அமைப்பதற்கான கூடுதல் சட்டப் பேரவை உறுப்பினர்களின் ஆதரவு குறித்து இந்த கூட்டத்தில் விவாதிக்கப்படும் என்று தெரிகிறது.

அதனைத் தொடர்ந்து புதிய அரசு அமைக்க ஆளுநரிடம் அவர் உரிமை கோருவார் என எதிர்பார்க்கப் படுகிறது.

முன்னதாக திரு. விஜய், திராவிட அரசு நிறுவனரான முன்னாள் முதலமைச்சர் சி. என். அண்ணா துரையின் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்.

❖❖❖❖❖❖❖❖

## ராஜினாமா

தி.மு.க. தலைவர் திரு. மு.க. ஸ்டாலின் தமது முதலமைச்சர் பதவியை இன்று ராஜினாமா செய்துள்ளார்.

அவரது பதவி விலகல் கடிதத்தை ஏற்றுக்கொண்ட ஆளுநர் திரு. ஆர். வி. அர்லேக்கர், புதிய அரசு அமையும் வரை அவர் பதவியில் தொடருமாறு கேட்டுக் கொண்டதாக மக்கள் மாளிகையின் செய்திக்குறிப்பு தொிவிக்கின்றது.

❖❖❖❖❖❖❖❖

## கேரளம்

கேரளத்தில் காங்கிரஸ் தலைமையிலான ஐக்கிய ஜனநாயக முன்னணி 102 இடங்களில் வெற்றி பெற்றதை தொடர்ந்து அரசு அமைப்பதற்கான பேச்சு வார்த்தைகளை ஐக்கிய ஜனநாயக முன்னணி தொடங்கி உள்ளது.

இருப்பினும் கட்சியின் சட்டமன்ற குழு கூட்டம் எப்போது நடைபெறும் என்ற தகவல்கள் இன்னும் வெளியாகவில்லை.

புதுதில்லியிலிருந்து அகில இந்திய காங்கிரஸ் குழுவின் பிரதிநிதிகள் கேரளம் வந்த பின்னரே கட்சியின் சட்டப்பேரவை

குழுக் கூட்டம் நடைபெறும் என்று தகவல்கள் தெரிவிக்கின்றன.

❖❖❖❖❖❖❖❖

புதுச்சேரி

புதுச்சேரி யூனியன் பிரதேசத்தில் என். ஆர் காங்கிரஸ் தலைமையிலான தேசிய ஜனநாயக கூட்டணி வெற்றி பெற்றதை தொடர்ந்து N. R. காங்கிரஸ் கட்சியில் புதிதாக தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களின் கூட்டம் நேற்று இரவு புதுச்சேரியில் நடைபெற்றது.

புதிய அரசு அமைப்பதற்கான ஆலோசனைகள் குறித்து இதில் விவாதிக்கப்பட்டதாக தொ◌ிகிறது

இதனிடையே இக்கூட்டணியில் அங்கம் வகிக்கும் பி.ஜே.பியின் ஆலோசனை கூட்டம் இன்று காலை நடைபெற்றது.

அடுத்தக்கட்ட நடவடிக்கைகள் குறித்து இதில் ஆலோசிக்கப்பட்டதாக தொ◌ிகிறது.

❖❖❖❖❖❖❖❖

தர்மேந்திர பிரதான்

நாட்டில் வலுவான ஆராய்ச்சி மற்றும் புத்தாக்க சூழலை உருவாக்க அரசு உறுதி பூண்டிருப்பதாக மத்திய கல்வி அமைச்சர் திரு. தர்மேந்திர பிரதான் திட்டவட்டமாக தொ◌ிவித்துள்ளார்.

புதுதில்லியில் இன்று நடைபெற்ற இந்திய தொழில்நுட்ப கல்விக்கழக உச்சி மாநாட்டில் இன்று உரையாற்றிய அவர், நாட்டின் ஆராய்ச்சிகள் படைப்பாற்றல் திறனுடன் கூடிய செயல் திட்டமாக உருவெடுக்க வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தினார்.

நாட்டில் ஸ்டார்ட் அப் நிறுவனங்களின் எண்ணிக்கை இரண்டரை லட்சமாக அதிகரித்துள்ள நிலையில் புதுமை தொழில் நுட்பங்களின் மையமாக இந்தியா உருவெடுத்துள்ளது என்று அவர் சுட்டிக்காட்டி◌ானார்.

உயர் கல்வி நிறுவனங்களின் வளாகங்களிலிருந்து ஸ்டார்ட் அப் நிறுவனங்களும், யூனிகார்ன் மையங்களும் வெற்றிகரமாக தோன்றியுள்ளதை அவர் சுட்டிக்காட்டினார்.

உலகளாவிய புத்தாக்க குறியீட்டில் இந்தியா 81-வது இடத்திலிருந்து தற்போது 38-வது இடத்திற்கு முன்னேறி உள்ளது ஆராய்ச்சிகளின் திறனை பறைசாற்றப்படுவதாக எடுத்துரைத்தார்.

❖❖❖❖❖❖❖❖

ஜெய்சங்கர்

இந்தியா - ஜமைக்கா இடையேயான ஒத்துழைப்பு கூட்டாண்மையின் முக்கிய தூணாக திகழ்கிறது என்று மத்திய வெளியுறவுத்துறை அமைச்சர் டாக்டர் எஸ். ஜெய்சங்கர் தொ◌ிவித்துள்ளார்.

அந்நாட்டு வெளியுறவுத்துறை அமைச்சர் கமினா ஜான்சன் ஸ்மித் மற்றும் அமைச்சரவை உறுப்பினர்களுடன் இன்று கலந்துரையாடிய பின் ஊடகத்திற்கு அவர் அளித்த பேட்டியில், இருதரப்பு உறவுகளின் ஒத்துழைப்பை மேலும் வலுப்படுத்துவதற்கான ஆலோசனைகள் மேற்கொள்ள பட்டதாக கூறினார்.

கலாச்சார பரிமாற்றம், விளையாட்டு, மின்னணு உள்ளிட்ட துறைகளில் ஒப்பந்தங்கள் கையெழுத்தானதாகவும் அமைச்சர் தொ◌ிவித்தார்.

இதனிடையே வெளியுறவுத்துறை இணையமைச்சர் திரு. பபித்ரா மர்க்கரிட்டா, கோஸ்டோரிக்கா குடியரசு ஹாண்டுரெஸ், பிலைஸ் டொமினிக்கா நாடுகளுக்கு வரும் 8-ம் தேதி பயணம் மேற்கொள்கிறார்.

❖❖❖❖❖❖❖❖

ஈரான்

ஐக்கிய அரபு அமீரகத்தின் ஃபுஜைரா பெட்ரோலியத் தொழிற்சாலைகள் மீது ஈரானின் ட்ரோன் தாக்குதலில் மூன்று இந்தியர்கள் காயமடைந்ததை தொடர்ந்து இச்சம்பவத்திற்கு பிரதமர் திரு. நரேந்திர மோடி கடும் கண்டனம் தொ◌ிவித்துள்ளார்.

கட்டமைப்புகள் மற்றும் சிவிலியன்களை இலக்காக கொண்டு நடத்தப்படும் தாக்குதல்கள் ஏற்றுக்கொள்ள முடியாதது என்று தமது சமூக வலைதளப்பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

ஐக்கிய அரபு அமீரகத்தின் அமைதி மற்றும் தூதரக நடவடிக்கைகளுக்கு இந்தியா முழு ஆதரவு அளிக்கும் என்று உறுதி அளித்துள்ள பிரதமர், அந்நாட்டுடன் இந்தியா துணை நிற்பதாகவும் கூறியுள்ளார்.

ஹோர்மூஸ் நீரிணை வழியாக தடையற்ற பாதுகாப்பான போக்குவரத்தை உறுதி செய்வதன் அவசியத்தை எடுத்துரைத்த பிரதமர், பிராந்திய அமைதி, நிலைத்தன்மை, உலகளாவிய எரிசக்தி பாதுகாப்பிற்கு இது மிகவும் இன்றியமையாதது என்று குறிப்பிட்டார்.

வெளியுறவு அமைச்சகமும் இந்த சம்பவத்திற்கு கண்டனம் தொ◌ிவித்துள்ளதோடு இந்நடவடிக்கை ஏற்றுக் கொள்ள முடியாதது என்றும் தொ◌ிவித்துள்ளது.

இப்பிராந்தியத்தில் அமைதியான தீர்வு ஏற்படுவதற்கான அனைத்து முயற்சிகளுக்கும் இந்தியா ஆதரவு வழங்க தயாராக இருப்பதாகவும் வெளியுறவு அமைச்சகம் கூறியுள்ளது.

❖❖❖❖❖❖❖❖

ஸ்ரீவஸ்தவா

அரியவகை நோய் மேலாண்மையில் நோயை முன்னதாக கண்டறிதல், புதுமை கண்டுபிடிப்புகள், வலுவான ஒருங்கிணைப்பு நடவடிக்கைகளின் அவசியத்தை மத்திய சுகாதார செயலர் திரு. ஸ்ரீவஸ்தவா வலியுறுத்தி உள்ளார்.

புதுதில்லியில் அரியவகை நோய்கள் தொடர்பான 2-நாள் தேசிய மாநாட்டில் இன்று உரையாற்றிய அவர், நோய் சார்ந்த சவால்களை புரிந்து கொண்டு செயலாற்ற வேண்டியது அவசியம் என்று கூறினார்.

தேசிய சுகாதார கொள்கையின் கீழ் நிதியுதவி 50 லட்சம் ரூபாய் வரை அதிகரிக்கப் பட்டுள்ளதாகவும், இதன்மூலம் அரியவகை நோய் தாக்குதலுக்கு உள்ளா நோயாளிகள் தரமான சிகிச்சையை பெற வகை செய்யப்பட்டுள்ளதாகவும் கூறினார்.

❖❖❖❖❖❖❖❖

அரியலூர்

அரியலூர் மாவட்டத்தில் அமைக்கப்பட்டுள்ள 25 மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட அதிநவீன குளிர்பதன

கிடங்கை விவசாயிகள் பயன்படுத்திக் கொள்ளுமாறு ஆட்சித்தலைவர் திரு. ரத்தினசாமி அறிவுறுத்தி உள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

.. வாய்ஸ் ..

❖❖❖❖❖❖❖❖

இருவரி

தூத்துக்குடி மாவட்டம் வேடநத்தம் கிராமத்தை சேர்ந்த மாணவியின் பாலியல் வன்முறை வழக்கு சம்மந்தமாக கைது செய்யப்பட்ட குற்றவாளியை காவல்துறையினர் இன்று தூத்துக்குடி மாவட்ட போக்சோ நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தினர்.

இவ்வழக்கு தொடர்பாக 15 பேரிடம் போக்சோ நீதிபதி விசாரணை நடத்தவுள்ளார்.

❖❖❖❖❖❖❖❖

மீனவர்கள்

மீன்பிடி தடைக்காலம் அமலில் உள்ள நிலையில் தூத்துக்குடி மாவட்ட மீனவர்கள் தங்களது விசைப் படகுகளை பழுது பார்க்கும் பணியில் ஈடுபட்டுள்ளதாக எமது செய்தியாளர் தொிவிக்கிறார்.

.. வாய்ஸ் ..

❖❖❖❖❖❖❖❖

கோவில்

மதுரை சித்திரை திருவிழா நிறைவடைந்ததை தொடர்ந்து அழகர் மலைக்கு திரும்பிய கள்ளழகரை ஆயிரக்கணக்கான பக்தர்கள் மலர்த்தூவி வரவேற்றதாக எமது செய்தியாளர் தொிவிக்கிறார்.

.. வாய்ஸ் ..

❖❖❖❖❖❖❖❖

வானிலை

வளிமண்டல காற்றழுத்த தாழ்வு பாதை காரணமாக தேனி, திண்டுக்கல், கரூர், திருச்சி, நாமக்கல், ஈரோடு, நீலகிரி மாவட்டங்களின் ஓரிரு இடங்களில் இன்று இடி மின்னலுடன்

கூடிய கனமழை பெய்யக்கூடும் என்று சென்னை வானிலை ஆய்வுமையம் தொிவித்துள்ளது.

மணிக்கு 40 முதல் 50 கிலோ மீட்டர் வேகத்தில் காற்று வீசக்கூடும் என்றும் இம்மையம் கூறியுள்ளது.

❖❖❖❖❖❖❖❖

கிரிக்கெட்

ஐ.பி.எல். 20-20 கிரிக்கெட் போட்டியில் புதுதில்லியில் இன்றிரவு ஏழரை மணிக்கு சென்னை சூப்பர் கிங்ஸ் – டெல்லி கேப்பிட்டல்ஸை எதிர்கொள்கிறது.

❖❖❖❖❖❖❖❖

கால்பந்து

சீனாவில் நடைபெறும் 17 வயதிற்கு உட்பட்டோருக்கான ஆசிய கோப்பை மகளிர் கால்பந்து போட்டியில் இந்தியா இன்று மாலை ஜப்பானை எதிர்கொள்கிறது.

❖❖❖❖❖❖❖❖

டேபிள் டென்னிஸ்

லண்டனில் நடைபெறும் உலக டேபிள் டென்னிஸ் சாம்பியன் போட்டியின் ஆடவர் பிரிவில் இந்தியா இன்று ஆஸ்திரியாவை எதிர்கொள்கிறது.

❖❖❖❖❖❖❖❖

இத்துடன் இந்த செய்தியறிக்கை முடிவடைந்தது.

❖❖❖❖❖❖❖❖